

குருதேவரின்
தேவகுமார நிலை



மெய்ஞ்ஞானக் கொடி



பிற்காலச் சோழப்பேரரசின் தந்தை
சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர்

**<u>இந்த இதழில் குருதேவர் உலகியலாக சீடர்களுக்கு அளித்த அறிவுரைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகிறோம். இதிலேயே குருதேவர் நாட்டிற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை எளிய முறையில் விளக்கி யுள்ளார்.</u>**

## உள்ளுறை

**1. 1982இல் குருதேவர் திருச்சி மண்டலப் பொறியியல் கல்லூரி (ம.பொ.க.) மாணவர்களுக்கு ஆற்றிய உரையின் எழுத்தாக்கம்.**

**- இந்த உரை திருச்சியில் உள்ள செல்வம் ஓட்டல் என்ற உணவுச் சாலையில் ஆற்றப் பட்டது. ம.பொ.க.விற்கு குருதேவர் வந்த கடைசிச் சுற்றுப்பயண முடிவின் போது கல்லூரிப் படிப்பை முடிக்கும் நிலையில் இருந்த தமது சீடர்களுக்காக வழங்கிய அறிவுரையும் எதிர்காலத் திட்டமுமே இந்த உரையின் மையக் கருத்து.**

**2. "மண்ணுக்குரைத்த மண்டல வாசகங்கள்" - சித்தர் நெறி நிலை உலகியல் அறிமுகம் - 31/1/1983இல் குருதேவர் எழுதிய அஞ்சல் கட்டுரை**



### <u>குருதேவரின் அறிவுரை</u>

ஒவ்வொரு தமிழனும் தங்கள் முன்னோர்கள் தங்களுக்கு அளித்துப் பயன்படுத்திய வாழ்வியல் நெறிதான் இந்து மதம் என்பதை உணரவேண்டும். தமிழர்கள் மதம்தான் இந்து மதம். இதுவே இந்த திருநாட்டிற்கு சிலவாயிரம் ஆண்டுகளாக வந்து குடியேறிய அன்னியர்களின் சூழ்ச்சிமிகு, மடமைமிகு, கற்பனைமிகு கருத்துக்களோடு கலந்து ஹிந்து மதம் என்று வழங்கப் படலாயிற்று. இப்போது இந்த பொய்யான ஹிந்துமதத்திலிருக்கும் கற்பனைகளையும், மடமைகளையும், மூடநம்பிக்கைகளையும், முதலாளித்துவங்களையும், சுரண்டல்வாதங்களையும் பிரித்துணர்ந்து மெய்யான இந்துமதத்தை மீண்டும் தங்கள் வாழ்வியலில் பயன்படுத்தி உயர வேண்டும்.

நண்பர்களே! நாம் எல்லோரும் ஒருங்கு கூடி இதுபோல குறிப்பிட்ட நேரத்தை என்றென்றும் பசுமையான நினைவில் நிறுத்திக் கொள்ளுகின்ற அளவிற்கு செலவழித் திருக்கிறோம். இது போன்ற ஒரு வாய்ப்பு மீண்டும் எப்பொழுது கிடைக்கும் என்ற ஏக்கம் நமக்குள் ஏற்படும். ஏற்படுவதுதான் இயற்கை. என்னைப் பொறுத்தவரை இதுபோல எண்ணற்ற நிகழ்ச்சிகள் என் வாழ்க்கையிலே. ஏன் என்றால், எண்ணற்ற ஊர்களுக்குள்ளே நான் யார் என்று தெரியாமலேயே நுழைந்து அங்கு அந்த மக்களுக்கு எண்ணற்ற நன்மைகளை செய்து விட்டு பிறகு என் பெயர் என்னவென்று கூறிக் கொள்ளாமல் கூட வெளியே வந்தேன். அதே நேரத்திலே பல காடுகளுக்குள்ளும், மலைகளுக்குள்ளும் என்னை யார் என்று சொல்லிக் கொண்டே நுழைந்தேன். ஆனால், கேட்பதற்கு ஆள் நிறைய இல்லை. எங்கோ மலை முகடுகளிலே குகையிலேதான் ஞானிகளும் மகான்களும் இருந்தார்கள். ஆனால், அவர்களை விட்டு நான் பிரிந்து வரும் பொழுது அவர்கள் எல்லோருமே நான் யார் என்று நினைத்து எனக்காக ஏங்கி என் பெயரைத் தெரிந்து கொண்டு பலமுறை என்னுடைய பெயரை அவர்களும் கேட்க நானும் என்னுடைய பெயரை சொல்லி விட்டு வெளியே வந்தேன். இதை ஏன் சொல்கிறேன் என்றால் ஆட்கள் அதிகமாக நடமாட்டம் இருக்கக் கூடிய ஊர்களுக்குள்ளே என்னை யார் என்று கூடச் சொல்லிக் கொள்ளாமல், சொல்லிக் கொள்ள முடியாமல் நுழைந்து வெளியேறினேன். ஆனால், ஆட்களே அதிக மில்லாத காடுகளுக்குள்ளே என்னை யார் என்று சொல்லி நுழைந்து பிறகு அங்கிருந்து வெளியே வரும் பொழுதும் என்னை யார் என்று சொல்லி விட்டுத்தான் வெளியே வந்தேன். இதை மீண்டும் மீண்டும் நான் என்னுடைய எழுத்துக்களிலும் நினைவுகளிலும் பதித்துக் கொண்டு இருக்கிறேன். என்னுடைய அஞ்சல்களிலும் குறித்து இருக்கிறேன்.

இன்றைய மனித நடமாட்டம் அல்லது .......... அல்லது நெருக்கம் மேலோட்டமாக இருக்கிறது. எதையுமே பசுமையாக இதயத்தில் நிறுத்திக் கொள்ள விரும்புவதில்லை. ஏனென்றால் இந்த நேரம் இருந்தால் போதும் அடுத்த நேரத்தைப் பற்றிப் பிறகு சிந்திப்போம் என்ற அவசரமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட மக்கள் இடையிலே எத்தனை ஆயிரம் முறை என் பெயரைச் சொன்னாலும் பயனில்லை. ஆனால், ஒரு சில நிகழ்ச்சிகளின் மூலம் அவர்கள் உணர்ச்சியிலே என்னைப் பதித்துக் கொண்டால் அவர்கள் இப்படி ஒருவன் இருந்தான். அவன் இன்ன இன்னது செய்தான் என்று சொல்லுவார்களே தவிர அவனுடைய பெயரைச் சொல்ல யோசிப்பார்கள். ஏன் என்றால் யாராவது ஒருவன் பெயரைச் சொன்னால் அவனுக்கு எங்கே புகழ் வந்து விடுமோ அவன் தலைவன் ஆகி விடுவானோ என்ற போட்டி பொறாமை மனம் படைத்தவர்கள்தான் இன்றைய மக்கள். அதனால்தான், இப்படிப் பட்ட மக்கள் கூட்டத்திலே நான் யார் என்று சொல்லத் தேவையில்லை. பல நிகழ்ச்சிகளை செய்து விட்டுப் போனால் அதுவும் எனது பெயரை பொதுவாக சித்தர் என்றே சொல்லிக் கொண்டு இருந்தேன். சித்தர் கருவூரார் என்று சொன்னால்கூட நான் யார் என்று தெரிந்து விடும். அவனும் யோசிப்பான் சித்தர் கருவூரார் என்றால் எனக்கும் புகழ் வந்து விடுமோ என்று. சித்தர் என்று நான் பொதுவாகச் சொன்னதனால் அவனும் சித்தர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே இருந்தார். சித்தர் பச்சையப்பன் கல்லூரியில் இருந்தார். சித்தர் பங்களூரில் இருந்தார், சித்தர் கல்கத்தாவில் இருந்தார், சித்தர் இமயமலைப் பகுதியிலே வாழ்ந்தார், சித்தர் இலங்கையில் இருந்தார், சித்தர் ஹாங்காங்கில் இருந்தார் என்று சொல்லத் தயாராக இருக்கிறான்; என்றால் இன்ன சித்தர் என்று குறிக்கவில்லை அல்லவா அதைப் போல.

மனிதன் அழுக்காறு நிறைந்தவன். பொறாமை நிறைந்தவன், போட்டிகள் நிறைந்தவன். அவனுக்கு, அவனுடைய எண்ணமெல்லாம் யாருக்கும் புகழ் வந்து விடக் கூடாது என்ற எண்ணம்தான். எனவே, அவனைப் போய் மீண்டும் சோதிக்காமல் இருப்பதற்குத்தான் நானும் என்னுடைய பெயரைச் சொல்லிக் கொள்ளாமலேயே இருந்தேன். ஆனால், காடுகளில் வாழுகிறவர்கள் எங்கோ ஒரு மூலையில் வாழ்ந்தாலும், அந்தக் காட்டுக்கு வரக் கூடியவன் யாராக இருக்க முடியும் என்று அவர்களுக்குத் தெரியும். ஏன் என்றால் காட்டு உலக வாழ்க்கையை சாதாரண மானவர்கள் வாழ்ந்து விட முடியாது. அங்கே நான் எதையுமே செய்யாமல் என் போக்கிலே ஏதோ ஒரு பைத்தியம் போல் அல்லது அரைக் கிறுக்கன் போல் திரிந்து கொண்டு இருந்தாலும் போதும். வந்து இருப்பவன் யார்?, அவனுடைய பெயர் என்ன?, எதற்காக வந்திருக்கிறான்? என்று எங்கு எங்கோ மூலை முடுக்குகளில் உள்ள ஞானிகளும் மகான்களும் ஒன்று திரண்டு பேசுவார்கள். ஒன்று திரண்டு வந்து சந்திப்பார்கள். நீங்கள் வந்திருக்கிறீர்கள், நீங்கள் யார்? எதற்காக வந்தீர்கள்? என்ன செய்யப் போகிறீர்கள்? என்ன செய்து கொண்டு இருக்கிறீர்கள்? என்று. ஏன் என்றால் அவர்களுக்குத்தான் தெரியும், காட்டுக்குள்ளே வரும் மனிதன் யாராக இருப்பான் என்று. எனவே, அவர்கள் என்னைக் கேட்கின்றார்கள் என்ற பொழுதுதான் நான் யார்? என்னுடைய எண்ணங்கள் என்ன?, என்னுடைய திட்டங்கள் என்ன? நான் என்ன என்ன செய்ய

விரும்புகின்றேன்? குறிக்கோள் என்ன? கொள்கை என்ன? இதுவரை எடுத்த முயற்சிகள் என்ன? இப்பொழுது எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சிகள் என்ன? அதற்காக என்ன எதிர்பார்க்கின்றேன்? என்பதை எல்லாம் சொல்லி விட்டு வந்தேன்.

நான் அந்த காட்டைப் போலத்தான் RECயை நினைத்தேன். ஓர் பெரிய பரந்த காட்டுப் பகுதியிலே சில மகான்கள், ஞானிகள் வாழ்வது போல சில மாணவர்கள் வாழுகின்ற இடமாக REC இருக்கின்றது. அங்கே நீங்கள் சிலர்தான் எனக்குக் கிடைத்தீர்கள் என்பதில் மிக்க மகிழ்ச்சி. ஏராளமான மாணவர்கள் நிறைய கிடைத்திருந்தால் என்னுடைய பெயரைக் கூட நான் சொல்லிக் கொண்டு இருக்க மாட்டேன். நீங்கள் சிலர் கிடைத்து இருக்கின்ற காரணத்தினால் எப்படி மலைமுகடுகளிலும் காடுகளிலும் நான் வாழ்ந்த அலைகடல் தாண்டிய தீவுகளிலும் என்னுடைய பெயரை அவர்களுக்கு விளக்கி உறுதியாகப் பதிவு செய்து விட்டு வந்தேனோ அதைப் போலத்தான் REC என்கின்ற மாபெரும் காட்டுக்குள்ளே; அங்கே மனிதர்கள் கூட மிகுதி கிடையாது. அங்கே இருக்கின்ற மாணவர்களும் மிகுதி கிடையாது. அந்த அதிகமில்லாத மாணவர்களிடையே அதிகம் இல்லாத மிகக் குறைவு; என் கையிலே நீங்கள் ஏறத்தாழ ஒன்பது பேர் கிடைத்தீர்கள் என்கின்ற நேரத்திலே இதை மிக மகிழ்ச்சியாக ஏற்றுக் கொண்டேன். நான் காட்டுக்குப் போவது போலத்தான் நினைத்துக் கொண்டு RECக்கு வருவேன்.

அங்கே காடுகளில் வளர்ந்த முனிவரிடமும் ஞானிகளிடமும் மகான்களிடமும் எந்த ஆர்வம் இருந்ததோ அதை விட பன்மடங்கு ஆர்வம் உங்கள் இடையிலே இருக்கிறது. இது என்றென்றும் வளரும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இந்த ஆர்வத்தை நன்றாகப் பயன்படுத்தித்தான் மனிதனுடைய ஆவி என்றால் என்ன? ஆன்மா என்றால் என்ன? உயிர் என்றால் என்ன? முற்பிறப்பு என்றால் என்ன? மறுபிறப்பு என்றால் என்ன? மனிதனுடைய வாழ்நாள் எவ்வளவு காலம் இருக்கப் போகிறது? இந்த வாழ்நாளுக்குள் அவன் எதை எதைச் செய்ய வேண்டும்? அப்படிச் செய்வது, தான், தனது குடும்பம், தனது சொந்தக் காரர்கள், தனது சாதிக்காரர்கள், அல்லது தனது வட்டாரத்து மக்கள் என்ற குறுகிய எல்லைக்குள் செயல்பட்டு சென்று விடாமல் மனிதன் என்ற பரந்து பட்ட, விரிந்து பட்ட அளவிலே செயல்படக் கூடியவர்களாக உங்களை எல்லாம் உருவாக்க வேண்டும் என்று ஆசை.

அதே நேரத்திலே 'தனக்கு என்று தாழ்வாரம் இருக்கின்றவன்தான் தேவாரம் படிக்க வேண்டும்' என்ற தத்துவத்தைப் போல அந்தத் தமிழன் தான் 'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!' என்று சொன்னான். அப்படிச் சொன்னவன் தான் தனக்கு என தாழ்வாரம் வேண்டும், பிறகு தேவாரம் படி என்று சொன்னான். இதை ஆழ்ந்து நோக்கினோம் என்றால்; ஞானிகள் தாங்கள் தவம் செய்வதற்கு ஒரு குகையோ அல்லது ஒரு மரத்தடியோ அல்லது ஓர் ஆற்றங்கரையோ அல்லது ஒரு மலைமுகடோ அல்லது ஒரு கோயிலோ தேர்ந்தெடுத்துக் கொண்ட பிறகுதான் தங்களுடைய சித்தாந்தங்களை வளர்க்கிறார்கள்.

இராமலிங்க அடிகளார் இன்னென்ன இடங்களிலே வாழ்ந்தார் என்று சொல்லுகின்ற அளவிற்கு சின்னச் சின்ன இடங்கள் இருக்கின்றன. அந்த இடங்களைத் தேர்ந்தெடுத்து வைத்துக் கொண்டுதான் வடலூர் இராமலிங்க அடிகளார் தன்னுடைய எண்ணங்களை விரிந்து பரந்து பட்ட போக்குடையவையாக வளர்த்திட்டார். அதைப் போல உங்களிடையே நான் சொல்லும் பொழுது ஒவ்வொருவரும் படிக்க வேண்டும், தேர்விலே தேற வேண்டும், விரைவிலே வேலைக்குப் போக வேண்டும், உலகியல் என்னவென்று நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு, நம்முடைய தத்துவங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். அந்த அடிப்படையில் நாம் செயல்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். எப்பொழுது தேவை ஏற்படுகிறதோ, எப்பொழுது இன்றியமையாத நிலை ஏற்படுகிறதோ, அப்பொழுதுதான் நாம் பதவிகளை உதறி விட்டுச் செயல்பட வேண்டும். அதற்கு முன்னாலேயே நாம் எந்தப் பதவிக்கும் போக மாட்டோம், பதவி தேவை இல்லை, பொது வாழ்க்கை என்று போவோம் என்றால், இன்றைக்கு பொது வாழ்க்கையின் பெயராலே சுரண்டி வாழுகின்றவர்கள், ஏமாற்றி வாழு கின்றவர்கள், பொய் பித்தலாட்டங்களாலேயே வைத்துக் கொண்டு வாழுகின்றவர்கள், கொள்கையே இல்லாமல் வாழுகின்றவர்கள், குறிக்கோளே இல்லாமல் வாழுகின்றவர்கள் அவர்கள் போலத்தான் நாமும் வாழ வேண்டி யிருக்கும். நாம் நமக்கு என்றோர் வாழ்க்கை அமைப்பு, ஒரு குறிப்பிட்ட வருமானம், அதற்கு ஏற்ற ஒரு செலவு, நமக்கு என்று குடும்பம், வாழும் இடம்; இந்த நெறிகளை எல்லாம் உருவாக்கிக் கொண்டு அந்த நிலையில் இருந்து கொண்டு பொதுத் தொண்டு செய்கின்றோம் என்றால்; நம்முடைய தத்துவத்தைச் சொல்லுகின்றோம் என்றால்; இது ஏதோ வயிறு வளர்ப்பதற்காக சொல்லப் படவில்லை, இதை ஏமாற்றுவதற்காக இந்தத் தத்துவத்தை சொல்லப்பட வில்லை, சுரண்டுவதற்காக சொல்லப்பட வில்லை என்ற எண்ணம் மக்களிடம் ஏற்படும். அந்த நல்ல எண்ணம், அந்த நம்பிக்கையே நமக்குப் புதிய

வலுவையும், வாளிப்பையும், வனப்பையும், பொலிவையும், செழுமையையும் தரும். அதில் ஐயமே கிடையாது.

என் அனுபவத்தில்; நான் இதை 36 வயது வரை எந்த வேலைக்கும் போக மாட்டேன், எந்த ஓர் இடத்திலும் இருக்க மாட்டேன், ஆனால் எல்லா இடங்களிலும் சுற்றித் திரிவேன். எல்லா நண்பர்களையும் பார்க்கிறேன், எல்லா மக்களிடமும் தத்துவங்களை எடுத்துக் கூறுகிறேன். மாயங்களைச் செய்கிறேன், அற்புதங்களைச் செய்கிறேன், நோய்கள் நலமாகின்றன, பேய்கள் ஓடுகின்றன, கடவுள்கள் தெய்வங்கள் தேவதைகள் எல்லாம் நேரில் வர வைத்துக் காட்டப்படுகிறார்கள், பாழடைந்த கோயில்கள் ஒளி மிக்கவையாக ஆக்கப் படுகின்றன, சின்னஞ்சிறிய கல்லை, கூழாங்கல்லை எடுத்துக் கூட இதுதான் கடவுள் என்று தூக்கி எறிந்தால் அல்லது எனது செருப்பை கழட்டிப் போட்டு இதைத் தொட்டுப்பார் உனக்கு உண்மை தெரியும் என்றால், அங்கே இறைமை அணுக்களுடைய ஆட்சி, இறைமை அணுக்களுடைய செயல் மிகத் தெளிவாக மெய்ப்பிக்கப் பட்டன. ஆனால், என் பின்னால் ஒரு கூட்டம் உருவாகவில்லை. வந்தவர்கள் எல்லாம் திருடர்களைப் போல் தங்களுடைய தேவைகளைச் சொல்லி அவை நலப்படுத்திக் கொண்டு அதற்காக எனக்கு விலையாக அல்லது கூலியாக சில நூறு அல்லது சில ஆயிரம் கொடுத்தார்களே தவிர உங்களைப் போல் இப்பொழுது நாம் உருவாகி வருவது போல ஒரு இயக்கத்தை உருவாக்குகின்ற அளவிற்கு யாரும் வரவில்லை.

ஒரு இயக்கத்தை நாம் உருவாக்க வேண்டும் என்று சொன்ன பொழுது வேறு வேலை இல்லையா அல்லது எங்களுக்குத்தான் வேலை இல்லையா. நீதான் வேலையும் பார்க்க வில்லை. ஒரு குறிப்பிட்ட வாழ்க்கையும் வாழவில்லை. உனக்குப் பெண்டாட்டியும் இல்லை, பிள்ளை குட்டியும் இல்லை, பெற்றோர்களைப் பற்றி அக்கரையும் இல்லை, உடன் பிறந்தாரைப் பற்றி அக்கரை இல்லை, உன் சொந்தக் காரர்களைப் பற்றி அக்கரை இல்லை. உனக்கு மனித வாழ்க்கை பற்றி என்ன தெரியும். எனவே, உன் பின்னால் வந்தால் என்ன இயக்கம் அமையப் போகின்றது. ஆண்டிகள் கூடி மடம் கட்டிய மாதிரித்தான் என்று சொல்லித்தான் எல்லோரும் சென்றார்கள். அவர்கள் ஆண்டிகள் கூடி ஒரு மடம் கட்டியது என்று சொல்லியது ஒரு சாக்குப் போக்குக்குத்தான். என்னால் ஒரு மாபெரும் இயக்கத்தை உருவாக்க முடியும் என்பது எல்லாருக்கும் தெரியும். ஆனால், தனக்கு என ஒரு வாழ்க்கை தேடிக் கொள்ளாத இவன் தனக்கு என ஒரு வருமானத்தைத் தேடிக் கொள்ளாத இவன் தனக்கு என ஒரு நிலையான கொள்கையை, குறிக்கோளை, நெறியை செயலாக்கிக் காட்ட முடியாத இவன் எதைச் செய்யப் போகிறான்? நாட்டுக்கு இவனால் என்ன பொதுத் தொண்டு செய்ய முடியும் என்றுதான் எல்லோருமே நினைத்தார்கள்.

அந்தக் கசப்பான அநுபவத்தினால்தான் நான் உங்களுக்குப் பலமுறை அஞ்சல் எழுதுவதோடு நீங்கள் தேர்வு எழுதிக் கொண்டு இருக்கின்ற இந்தக் காலக் கட்டத்திலே நான் உங்களைப் பார்க்க ஓடி ஓடி வந்தேன். என்னால் நடக்க முடியாது என்றாலும் அதைப் பற்றிக் கவலை இல்லை. என்னால் வரமுடியாது என்றாலும் கவலை இல்லை; வரக் கூடிய எந்த சூழ்நிலை இல்லை என்றாலும் கவலை இல்லை என்ற சூழ்நிலையில்தான் வந்தேன். உங்களுக்கு அறிவித்து விட்டுச் சென்றேன். ஏன் என்றால், உங்களுடைய தேர்வின் முடிவு நல்லதாக இருக்க வேண்டும். உங்களில் யாரும் குற்றம் கூறிவிடக் கூடாது, வரட்டு வேதாந்தத்தைப் பேசிக் கொண்டு அல்லது மதத்தை நம்பி அல்லது சாத்திர சம்பிறதாயங்களை நம்பி அல்லது பேய் பிசாசுகளை நம்பி இவர்கள் வீணாகிப் போய் விட்டார்கள் என்று யாரும் சொல்லக் கூடாது.

நீங்கள் ஒரு நிலையான, ஒவ்வொருவரும் ஒரு பொறியியல் வல்லுனராக மாறி ஆளுக்கு ஓர் அலுவலகத்தில் அமர்ந்து அதற்குப் பிறகு நீங்கள் இருக்கக் கூடிய அந்த அந்த வட்டாரத்துக்கு என்னை வரவழைத்து அங்கே தத்துவங்களைப் பேசச் சொன்னால், அங்கே நமது மொழியைப் பேசச் சொன்னால், இலக்கியத்தைப் பேசச் சொன்னால், சாத்திர சம்பிறதாயங்களைப் பற்றிப் பேசச் சொன்னால், அல்லது நாம் உருவாக்க நினைக்கின்ற நிருவாக நிறுவன ஒழுங்கு அமைப்பும், கட்டுப்பாடும், செயல்திட்டமும் உடைய வெகு தெளிவான கொள்கையும் குறிக்கோளும் உடைய இயக்கத்தைப் பற்றிப் பேசச் சொன்னால் அப்பொழுது சமுதாயம் ஏற்றுக் கொள்ளும். ஒவ்வொருவரின் அடிப்படையிலும் நமக்கு என்று சிலர் தோன்றுவார்கள் என்றால் நாம் உருவாக்கக் கூடிய இயக்கம் வலிமை மிக்கதாக இருக்கும்.

எந்த ஒரு இயக்கமும் எண்ணிக்கையைப் பொறுத்ததல்ல. இந்த நாட்டின் அரசியலை உற்று நோக்குவோம் என்றால், யார் இயக்கம் வைத்தாலும் சரி, அதற்கு என்று கூட்டம் சேரும். அந்த இயக்கம் வைக்கின்றவர்களிடம் பணம் ஒன்று இருந்தால் போதும், பதவியைப் பிடித்து விட முடியும் என்ற ஓர் எண்ணம் இருக்கிறது. இன்றைக்கு அப்பாவி மக்கள் அவ்வப் பொழுது கிடைக்கக் கூடிய பணத்திற்காக ....... தங்களுடைய வாக்குச் சீட்டுக்களைத் தரத் தயாராக இருக்கிறார்கள். எதையுமே சிந்தித்துப் பார்க்கத் தெரியாத மக்களாக இருக்கிறார்கள்.

ஏமாளி மக்களாக இருக்கிறார்கள். எனவே, நாமும் ஓர் அரசியல் இயக்கம் வைத்தால் மிக எளிதாக நம் பின்னால் ஒரு கூட்டம் வரும். ஆனால், எந்தத் திட்டத்தையுமே நாம் செயலாக்க முடியாது. நாம் திட்டத்தை செயலாக்க வேண்டும் என்றால் விரல் விட்டு நமக்கு எண்ணக் கூடிய தொண்டர்கள் இருந்தால் போதும். அந்தத் தொண்டர்களை நான் அடிக்கடித் தலைவர்களை உருவாக்கு கின்றேன் என்று சொல்லுவது தலைமைப் பண்பு உள்ளவர்களை அல்லது தளபதிகளை அல்லது தலைமை அலுவலர்களை அல்லது அதிகாரிகளை அல்லது ஆளுநர்களை உருவாக்குகின்றேன் என்றுதான் பொருள்.

ஏன் என்றால், குரு பாரம்பரியத்தின் அடிப்படையிலேயே தலைவர்களை யாரும் உருவாக்க முடியாது, தலைவர்கள் தானாகத் தோன்ற வேண்டும். அப்படித் தோன்றுவதற்கு அவர்களை வளர்க்கின்றவர்கள் வேண்டும் என்று சொன்னார்கள். நான் அந்தக் கருத்தைக் கூட பொய் ஆக்க வேண்டும் என்பதற்காக, சிறந்த குருவாக இருந்தால், திறம் சிறந்த ஆசானாக இருந்தால் அவனிடம் எந்த மாணவன் கிடைத்தாலும் சரி, அந்த மாணவனைச் சிறந்த தலைவனாக உருவாக்க முடியும் என்பதைத்தான் நான் இப்பொழுது செயலாக்கிக் கொண்டு இருக்கிறேன். தலைவர்கள் பிறக்க வேண்டும் உருவாக்க முடியாது என்கின்ற அளவிலேதான் உங்களைத் தலைவர்கள் என்று சொல்லி அந்த ஆர்வத்துடன் உருவாக்கி வருகிறேன். நீங்களும் உருவாகி வருகிறீர்கள். இந்த ஒன்று இரண்டு நாட்களுக்குள்ளே நாம் கலந்து பழகிக் கொண்டவர்கள்; நாம் செய்த யாகங்கள், பூசைகள் அல்லது சொற்பொழிவுகள், அல்லது கருத்துப் பரிமாற்ற உரையாடல்கள் இவைகள் நம்மிடையில் மிகப் பசுமையாக இருக்கும். சீறி வருகின்ற மறப் புலியைப் போல சினந்து நிற்கின்ற சிங்கத்தைப் போல, மிரண்டு அரண்டு வீரிட்டு பிளிறிட்டு ஓடி வருகின்ற காட்டு ஆனையின் வேகத்தைப் போல் நம்முடைய இயக்கம் உறுதியாக இருக்கும். ஏனென்றால், நாம் உருவாக்கக் கூடிய ஆட்கள் ஒவ்வொருவரும் ஒரு சிங்கமாக ஒரு வேங்கையாக ஒரு மாபெரும் மத யானையாக அல்லது வெறி கொண்ட களிறாக செயல்படுவார்கள், செயல்பட்டே தீருவார்கள் அல்லது இப்பொழுது செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் இப்பொழுது அநுபவப் பூர்வமாக உணருகிறேன்.

எந்த ஒரு தியாகத்தையும் நீங்கள் செய்யத் தேவை இல்லை என்று சொல்லி வருகின்ற நேரத்திலேயே எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கக் கூடியவர்களாக உருவாகி இருக்கிறீர்கள். ஆனால், நாம் தலைவனாக வேண்டும் என்பதற்காகவோ அல்லது நீங்கள் எல்லாம் ஏதாவது ஒரு நிலையை அடைய வேண்டும் என்பதற்காகவோ நாம் இயக்கம் அமைக்க வில்லை.

ஏறத்தாழ 35 ஆண்டுகள் ஆகியிருக்கிறது, இந்தியத் துணைக் கண்டத்திலே இங்கு அரசியல் நடந்து கொண்டு இருக்கிறது. இங்கு ஏழைகள் இருந்து கொண்டே இருக்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் இருந்து கொண்டே இருக்கின்றது. எங்குப் பார்த்தாலும் பிச்சைக் காரர்கள் இருந்து கொண்டே இருக்கிறார்கள். எங்குப் பார்த்தாலும் கை கால் நொண்டி குட்ட நோய் தொழுநோய் பிடித்தவன், பைத்தியம் பிடித்தவன், அரைப் பைத்தியம் பிடித்தவன் என்பவன் எல்லாம் பிச்சைக் காரனாக வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். நாற்றம் அடிக்கின்ற சாக்கடை ஓரத்திலே குடிசைகள் கட்டி வாழுகின்றவர்கள் பெருகிக் கொண்டே இருக்கின்றார்கள். முக்கால் நிர்வாணமாகவும், முழு நிர்வாணமாகவும் வாழும் மக்கள் வளர்ந்து கொண்டே இருக்கிறார்கள். முக்கால் பட்டினி முழு பட்டினி என்று கிடக்கின்ற மக்கள் வாழ்ந்து கொண்டே இருக்கிறார்கள். இதைப் பற்றி யாருக்குமே அக்கரை இல்லை. யாருக்குமே அக்கரை இல்லை என்றால் இந்த நாட்டை யார் ஆளுகின்றார்கள் என்று கேட்க விரும்ப வில்லை. எது ஆளுகிறது, எந்தத் தத்துவம் இந்த நாட்டை ஆளுகிறது; அந்தத் தத்துவத்திலே தவறு இருக்கிறது அல்லது பிழை இருக்கிறது, குறை இருக்கிறது, ஊனம் இருக்கிறது; அதைச் செப்பனிட்டுப் பார்ப்போம் என்று நெருங்க முடியவில்லை.

ஏன் என்றால் இந்த நாட்டிலே தத்துவமே அரசு ஆள வில்லை. தனிப்பட்ட மனிதர்கள்தான் இந்த நாட்டிலே அரசியலை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தனிப் பட்ட மனிதர்களின் சொந்த விருப்பு வெறுப்புகளைப் பொறுத்துத்தான் நாட்டிலே அரசியல் திட்டங்கள் இருக்கின்றன. எந்த விதமான தொலைதூர நோக்கத்தோடு திட்டமிட்டு நெடுங் காலமாகப் பயன்படக் கூடிய ஒரு மிகச் சிறந்த திட்டத்தை, திட்டங்களை உருவாக்கிக் கொண்டு எந்த ஒரு அரசியல் தலைவனும் புறப்படவில்லை. ஏனென்றால், அரசியல் அடிக்கடி மாறக்கூடிய ஒன்றாக இருக்கின்றது. மிக அவலமானதாக, கேவலமானதாக இருக்கின்றது. ஆளும் கட்சியாக இருக்கின்றவன் தான் என்றென்றும் ஆளும்கட்சியாக இருக்க வேண்டும் என்பதற்காகவே பல தவறுகளை அனுமதிக் கின்றான். ஊழல்களை அனுமதிக்கின்றான். சுரண்டல்களை அனுமதிக்கின்றான். ஏமாற்றுக்களை அனுமதிக்கின்றான். ஏமாற்றுக்களை அனுமதிக் கின்றான். பித்தலாட்டங்களை அனுமதிக்கின்றான். திருட்டுக்களை அனுமதிக்கின்றான். கொலை

காரர்களை அனுமதிக்கின்றான். அவர்களை எல்லாம் வாழ விடுகிறான். நடமாட விடுகின்றான். எனவே, எல்லா ஒழுக்கக் கேடுகளையும் வாழ விட்டால்தான் இவன் தொடர்ந்து ஆளும் கட்சியாக இருக்க முடியும் என்கின்ற நிலையிலே எத்தகைய நல்லவன் ஆளும் தலைவனாக வந்தாலும் அவன் பொல்லாதவனாக இழிந்தவனாக நலக் குறைவு உள்ளவனாக மாற்றப் படுகிறான். அதே நேரத்திலே எதிர்க் கட்சியாக இருக்கின்றவன் தான் மீண்டும் ஆளும்கட்சியாக ஆக வேண்டும் என்பதற்காக ஆளும் கட்சியாக இருக்கின்றவன் எந்த நல்லது செய்தாலும் அதிலே குறை காணுகின்றான். அதோடு தன்னுடைய இயக்கம் மீண்டும் வர வேண்டும் என்பதற்காக எல்லா விதமான அயோக்கியத் தனங்களையும் பித்தலாட்டங்களையும் ஏமாற்றுக் களையும் சுரண்டல்களையும் செய்கின்றான்.

எனவே, இந்த நாட்டிலே அரசியல் மூலம் எந்த நன்மையும் ஏற்பட முடியாது. அரசியலிலே எந்த கட்சி ஆட்சிக்கு வந்தாலும் எதுவும் செய்ய முடியாது. நாம் விரும்புவதெல்லாம் எந்தத் தலைவன் வந்தாலும் இந்த நாட்டிலே எதையும் செய்ய முடியாது. தத்துவம் வர வேண்டும். அந்தத் தத்துவம் எது? ஒவ்வொரு மனிதனுடைய ஆணவத்தை, அகம்பாவத்தை, பொறாமையை, போட்டியை, பேராசையை, ஏமாற்றை, கெட்ட புத்தியை மாற்றக் கூடிய ஒரு தத்துவம் வேண்டும் என்றால் அது சமுதாயமா, அல்லது சமுதாயத்தை உருவாக்குகின்ற சமயமா என்பதுதான்.

சமுதாயப் புரட்சியால் எதையும் செய்ய முடியாது. சமய வழிப் புரட்சியால்தான் எதையும் செய்ய முடியும். மதத்தால்தான் தனி மனிதனை சிந்திக்க வைக்க முடியும். அவனுடைய உள்ளத்தைத் தொடமுடியும். அவனுடைய சிந்தையைத் தொடமுடியும். அவன் செயல் புரியாமல், அல்லது தன்னுடைய செயலுக்கு விளக்கங்கள் தெரியாமல் தன்னால் அறிந்து கொள்ள முடியாமல் காரணகாரியங்களுக்கு அப்பாற்பட்ட செயல்களை எண்ணித் திகில் பிடித்து இருக்கும் பொழுது, விவரமே தெரியாமல் குழம்பிக் கொண்டிருக்கும் பொழுது அதைத் தீர்த்து வைக்கக் கூடிய அருட்கலைகளை, 48 அருட்கலைகளை, 64 ஆயகலைகளைக் கற்ற நம்மவர்கள் மனித சமுதாயத்திலே பல தனி மனிதர்களை நெருங்குகிறோம் என்றால் அவர்களுக்கு நலம் அளிப்போம், நலிவுகளைப் போக்குவோம், மெலிவுகளைப் போக்குவோம், அச்சங்களைப் போக்குவோம், கூச்சங்களைப் போக்குவோம், மாச்சரியங்களைப் போக்குவோம், புரியாததைப் புரிய வைப்போம், தெரியாததைத் தெரிய வைப்போம், அறியாமையை அகற்றுவோம், முடியாததை முடியக் கூடியதாக ஆக்கித் தருவோம். அந்த நிலையில் பல தனி மனிதர்கள் நம் பின்னால் ஒன்று திரண்டு வருவார்கள். அந்தத் தேர்ந்து எடுக்கப் பட்ட தனிமனிதர்களை நாம் இயக்கமாக வழிப் படுத்துவோம் என்றால் அந்தத் தேர்ந்து எடுக்கப்பட்டவர்களை நாடெங்கும் அனுப்புவோம் என்றால்; கிராமத்துக்கு நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவன் இருக்கிறான் என்றால் போதும், அந்தக் கணக்கிலே நமக்கு விரல்விட்டு எண்ணக் கூடியவர்கள் நமக்கு கிடைத்து விட்டால் நாம் உறுதியாக இந்த நாட்டை எல்லா அளவிலும் மாற்றிக் காட்டுவோம். மாற்றிக் காட்டுவதற்குப் புத்தகங்களை எழுதிப் பயனில்லை; மனிதர்களை உருவாக்க வேண்டும். அதைத்தான் நான் செய்து கொண்டு இருக்கிறேன். அந்த மாபெரும் பணியிலே இணையற்ற தொண்டாக எங்களோடு இணைந்து செயல்படத்தான் நீங்கள் உருவாகியிருக்கிறீர்கள்.

இன்றைக்கு நாம் எடுத்துக் கொள்கின்ற உறுதி மொழி: இன்றைக்கு எப்படி சந்தித்து மகிழ்ந்தோமோ இதைப் போல நாம் மாதத்திற்கு ஒரு முறை இல்லாவிட்டாலும், மூன்று மாதத்திற்கு ஒருமுறை, ஆண்டுக்கு நான்கு முறை மூன்று முறையாவது யாராவது சிலருடைய முயற்சியால் ஓர் இடத்தில் கூடி இந்த நாட்டின் சமயம் சமுதாயம் அரசியல் இலக்கியம் கலை தொழில் இவைகளைப் பற்றி விவாதிக்க வேண்டும்.

நாம் கருத்துப் புரட்சியைத்தான் நம்புகிறோம். Revolution in Thinking, Revolution in Idea, in Idealogy. அப்பொழுதுதான் நம்மால் எதையும் செய்ய முடியும். மனிதர்களை நாம் கூவி அழைப்பதெல்லாம் எண்ணப் புரட்சிக்குத் தயாராகுங்கள். பிறகு கருத்துப் புரட்சிக்குத் தயாராகுங்கள் என்றுதான் சொல்லுகிறோம். எண்ணப் புரட்சி நிகழ்ந்தால்தான் கருத்துப் புரட்சி ஏற்படும். எண்ணத்திலே புரட்சி ஏற்பட வேண்டும். இந்தப் பழமைகளை உதறித் தள்ளுவதற்கு எண்ணத்திலே புரட்சி வேண்டும். இந்தப் பழமைகள் ஏன் நீடித்துக் கொண்டிருக்கின்றன, ஏமாற்றுக்கள் ஏன் நீடித்துக் கொண்டிருக்கின்றன, தனி மனிதர்கள் கொள்ளை அடித்துக் குவித்துக் கொண்டிருக் கிறார்கள். தனி மனிதர்கள் தொடர்ந்து அரசியலிலே தலைமை வகித்துக் கொண்டு இருக்கிறார்கள். விரல்விட்டு எண்ணக் கூடிய பணக்காரர்கள் மட்டும் இந்த நாட்டை சுரண்டிக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை எப்படி அனுமதித்துக் கொண்டிருக்கிறார்கள் ஒரு விடுதலை நாட்டிலே என்று நாம் கேட்க வேண்டும்.

விடுதலை பெற்று 35 ஆண்டுகள் ஆன பிறகும் திரும்புகின்ற இடங்கள் எல்லாம் பிச்சைக்காரர்கள் கூட்டம், இந்தப் பிச்சைக் காரர்களை ஒழிக்கவே முடியாதா? எச்சிலை எடுக்கின்ற நாடோடி நரிக்

குறவர்களை ஒழிக்க முடியாதா? வேலை இல்லை என்று சொல்லிக் கொண்டு திரியும் இளைஞர்களை இந்த நாட்டு அரசாங்கமே சோம்பேறிகளாக்குகிறது. அவர்களை நாம் தடுத்து நிறுத்த முடியாதா? என்றுதான் நாம் கேட்கிறோம். வேலையில்லை என்கின்ற பொழுது கல்லூரிகளும் கலாசாலைகளும் ஏன் நடந்து கொண்டு இருக்கின்றன? வெறும் எழுத்து அறிவோடு, கூடுமானால் பள்ளிப் படிப்போடு பத்தாவதோடு நிறுத்தி விட வேண்டியதுதானே? கல்லூரிகளை இழுத்து மூடிவிட்டு தொழில் கல்லூரிகளைத் திறக்க வேண்டும் என்றுதான் சொல்லுகிறோம். B.A.க்கும், B.Sc.க்கும் M.A.க்கும், M.Sc.க்கும் வேலையில்லை. M.B.B.S.க்கும் B.E.க்கும், Polytechnicக்கும் வேலை இருக்கிறது என்றால் மற்றதை இழுத்து மூடு என்றுதான் சொல்லுகிறோம். அதைச் சொல்லுகின்ற தைரியம் யாருக்கும் இல்லை என்றால் அந்தக் கல்வியின் பெயரால் சுரண்டி வாழுகின்றவர்கள் கல்வியை ஒரு விலைக்கு விற்றுக் கொண்டு இருக்கிறார்கள்.

இந்த நாட்டுக் குழந்தைகள் சுதந்திரக் குழந்தைகள். ஆனால், என்ன நடக்கிறது? ஒரு குழந்தை Church Park Conventக்குப் போனால் மாதம் 1000 ரூபாய் செலவழித்துக் கல்வியை விலைக்கு வாங்குகிறது. இன்னொரு conventக்குப் போனால் மாதம் 500 ரூபாய் செலவழித்து கல்வியை விலைக்கு வாங்குகிறது. இன்னொரு குழந்தைக்கு நூறு ரூபாய், இன்னொரு சின்னப் பள்ளிக் கூடமாயிருந்தால் மாதம் 20 ரூபாய், அதைவிட சின்ன பள்ளிக் கூடத்திற்கு 10 ரூபாய், பிச்சைக் காரப் பள்ளிக்கூடம் என்று அரசாங்கம் பள்ளிக் கூடம் நடத்துகிறது. அங்கு மதியவேளை சோறு போட்டு பாடம் சொல்லித் தருகிறது. இது என்ன நியாயம்? சுதந்திரத்தாய் பாரதத்தாய் ஈன்றெடுத்த குழந்தைகளிலே மழலை பேசும் அப்பாவிக் குழந்தைகளுக்கு கல்வி தரும் பொழுது ஒரு குழந்தைக்கு கல்வி ஆயிரம் ரூபாய்க்கு இன்னொரு குழந்தைக்கு 500 ரூபாய்க்கு இன்னொன்றுக்கு 100 ரூபாய், இன்னொன்றுக்கு 50, 20, 10 ரூபாய் அப்புறம் பிச்சைக் காரக் கல்வி. மதியச் சோறு போட்டு கல்வி சொல்லிக் கொடுக்கிறார்கள் என்றால் அந்தக் கல்வியின் தரம் எப்படி இருக்கும்.

ஆயிரம் ரூபாய்க்கு தன்னுடைய குழந்தைக்கு கல்வியை விலைக்கு வாங்கித் தருகிறான் ஒரு தந்தை என்றால் அவன் தன்னுடைய மகன் அமெரிக்காவுக்குப் போக வேண்டும் அல்லது ஆசுத்திரேலியாவுக்கு போக வேண்டும்; அங்கிருந்து பணத்தை சம்பாதித்துக் கொண்டு வர வேண்டும் என்றுதான் நினைப்பான். அவன் தாய்நாட்டை விலைக்கு விற்பான். இனத்தை விலைக்கு விற்பான். தாய்மொழியை விலைக்கு விற்பான். இந்த நாட்டினுடைய நீதியை விலைக்கு விற்பான். இந்த நாட்டு மக்களின் நன்மையை விலைக்கு விற்பான். சொல்லப் போனால் எதையுமே விலைக்கு விற்கத் தயாராக இருப்பான். மான ஈனமற்ற பிறவிகளாகத்தான் இன்றைய படித்த கூட்டம் இருக்கிறது. இந்தக் கம்பெனியிலே வேலை பார்க்கிறவனுக்கு 50 ரூபாய் அடுத்த கம்பெனியிலே கூடக் கொடுக்கிறான் என்றால் உடனே இந்த வேலையை உதறிவிட்டு அடுத்த கம்பெனிக்குப் போகத் தயாராக இருக்கிறான். கூலிக்கார Mentality. Coolism. கூலிக்கார பையன்களையும் பிச்சைக்காரப் பையன்களையும் தான் நம்ம படிப்பு உண்டாக்குகிறது. இந்த நாட்டுப் பள்ளிக்கூடங்கள் யாரை உண்டாக்குகிறது என்றால், எச்சிலை பொறுக்குகின்ற நாய்களை உருவாக்குகிறது. ரொட்டித் துண்டுக்கு வால் ஆட்டும் நாய்தான் B.A.வும் M.A.வும் M.Sc.யும் படித்திருக்கின்றன. இந்த நாய்கள் எந்த வெளி நாட்டிற்கும் போகத் தயாராக இருக்கின்றன. எச்சிலைச் சோறுக்கு ஓடி வருவது போல ஒரு விளம்பரம் வெளி நாட்டிற்குத் தேவை என்று வந்தால் எல்லாப் படித்தவனும் வேலைக்குப் போகத் தயாராக இருக்கிறான். தன்னுடைய தாயைப் பற்றிக் கவலை இல்லை, தாரத்தைப் பற்றிக் கவலை இல்லை, தான் ஈன்ற மக்களைப் பற்றி கவலை இல்லை. தாய் மொழி, நாடு, இனம் பற்றிக் கவலை இல்லை. எங்கே அதிகம் சம்பளம் இருக்கிறதோ, அங்கே போகத் தயாராக இருக்கிறான். அந்த நாட்டாளன் இவன் கையில் துப்பாக்கியைக் கொடுத்து இந்தியாவிற்கு விரோதமாக சண்டை போடு என்றால் உறுதியாக சண்டை போடுவான். ஏன்னா இவன் கூலிக்காரப்பயல்தான்.

இப்படிப்பட்ட கூலிக் காரத் தன்மையை வளர்க்கக் கூடிய கல்வி தேவையா? ஏனென்றால் கல்வி விலைக்கு விற்கப் படுகிறது. இதை நிலையாக நாம் சிந்தித்தால் இன்றைக்கு அரசியலில் இருக்கக் கூடிய எவனுமே தைரியமாக இல்லை இதைச் சொல்லுவதற்கு. எனவே, நாம் அரசியலைப் பற்றிக் கவலைப்படவில்லை. நாம் சமுதாயத்தில் ஒன்றும் சொல்லத் தயாராக இல்லை. ஏனென்றால் அவன் எங்கோ ஒரு வெறி பிடித்த வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறான். எப்படியாவது பணக்காரனாகி விட வேண்டும் என்று. Middle Class Groupஇல் இருக்கிறவன் எல்லாம் என்ன நினைக்கின்றான்? ஏதோ ஒரு அரசாங்க Loanஐப் போட்டு ஒரு வீடு வாங்கிடனும். முடிஞ்சா ஒரு Scooter வாங்கணும் இல்லை ஒரு Car வாங்கணும். இதோடு அவங்க வாழ்க்கை முடிந்து விட்டது. ஒரு பிள்ளை இரண்டு பிள்ளை பெத்துக்கிறான். அந்த பிள்ளைக்கு வாழறத்துக்கு 4 TC pant, 4 TC Shirt வைச்சுக்கிறான். சிக்கனமாக வாழ கற்றுக் கொள்ளுகிறான். அதிலேயே அவனுடைய புரட்சிகள் செத்துப் போய் விடுகின்றன. அதை உடைத்து எறிய வேண்டி

இருக்கும். அதை உடைத்து எறிய வேண்டியது என்றால் நாம் நம்முடைய சொந்தக் காலில் நின்று தத்துவத்தைச் சொல்லுவோம்.

நாம் தத்துவத்தின் வாரிசுகள். தத்துவத்தின் தலைவர்கள். இந்த நாட்டை இன்ன தத்துவம் ஆளப் போகிறது என்று சொல்லுவோம். எழுதிவைத்து தயாராக இருக்கிறோம். இந்த நாட்டை 3 மணி நேரத்தில் கூட மாற்ற முடியும் என்பதற்காக. இந்த நாட்டிலே என்ன வளமில்லை? இங்கு பங்கு போடுகின்ற முறையில்தான் தவறு இருக்கிறது. உற்பத்தி ஆகின்ற பொருளுக் கெல்லாம் வைக்கின்ற விலைகள் யார் கையிலேயோ இருக்கின்றது. வாங்குகின்ற மக்களிடம் இல்லை. இதை நாம் சிந்திப்போம் என்றால் வணிகம் முறையை மாற்றுவதை விட அதை மாற்றுவதற்கு சிந்தனை உள்ள முறையை மாற்ற வேண்டும். அதனால் விவசாயத்திலே புரட்சி செய்து பயனில்லை. பொருள்களை நிறைய உற்பத்தி செய்து பயனில்லை. யார் விற்கிறார்கள்? It is the rule of Traders. இங்கு யார் ஆளுகிறார்கள்? வணிகர்கள் இந்த நாட்டை ஆளுகிறார்கள். அந்த வணிகத் துறையிலே நாம் ஒரு பெரிய மாற்றத்தைச் செய்யா விட்டால் என்றும் ஏமாற்றம் இருந்தே தீரும். அதற்கும் நம்மிடம் திட்டம் இருக்கின்றது. தெளிவு இருக்கின்றது. கொள்கை இருக்கின்றது. குறிக்கோள் இருக்கின்றது.

எனவே, இதற்காக நாம் ஆங்காங்கே நம்முடைய மதத்தின் பெயரால் மதவழிப் புரட்சிக்கு நாம் தயாராகிறோம். நாம் நேர்மையானவர்கள், உண்மையானவர்கள், மேன்மையானவர்கள். ஏற்றத் தாழ்வைப் போக்க வேண்டும் என்று சொல்கிறோம். சமத்துவ சகோதரத் தத்துவப் பொதுவுடமை கூட்டுறவு சமுதாயம் அமைக்க வேண்டும் என்று சொல்லுகிறோம். நமக்கு அரசியலைப் பற்றிக் கவலை இல்லை. எந்த நாய் ஆண்டாலும் சரி, அவனைப் பற்றிக் கவலை இல்லை. இந்த நாட்டை எது ஆளுகின்றது? தத்துவம்தான். இராமாயண காலத்திலே இந்த நாட்டை 14 வருடம் இராமனுடைய செருப்பு ஆண்டு இருக்கிறது. எனவே, நாய் உயிர் உள்ளது. ஆண்டு விட்டுப் போகட்டும். நம்மை, நம் இந்தியாவை செருப்பே 14 ஆண்டுகள் ஆண்டிருக்கின்றது என்ற பொழுது ஒரு நாய் ஆளவா கூடாது? கழுதையோ பன்றியோ கூட ஆண்டு விட்டுப் போகட்டும். ஆனால், இங்கே சமத்துவம் இருக்க வேண்டும் என்பதுதான். அதற்கு, இளைஞர்களால்தான் முடியும். அதுவும் இளைஞர்கள் என்றால் நான் எழுதிய புத்தகங்கள், நான் எழுதிய காவியங்கள், நான் எழுதிய காப்பியங்கள், நான் எழுதிய பெருங்கதைகள். நீங்கள் நான் எழுதி முடித்த கட்டுரைகள். நீங்கள் உங்களுடைய சிந்தையுடன் அவை வளர வேண்டும்.

நீங்கள் ஆங்காங்கே உரையாடல்களாகப் பேச வேண்டும். அப்பொழுதுதான், நாம் விரும்புகின்றவற்றை அமைதி வழியிலே நிலைக்க முடியும். இல்லா விட்டால் இன்றைக்கு வன்முறைச் சக்திகள் தலைதூக்கி இருக்கின்றன. வன்முறை சக்தியினால் நாட்டிலே எதையுமே செய்ய முடியாது. விரல் விட்டு எண்ணக் கூடிய சிலரைக் கொன்று விடுவதாலோ அல்லது சில இடத்தைக் கொள்ளை அடித்து விடுவதாலோ அல்லது சிலதை வெடி வைத்துத் தகர்த்து விடுவதாலோ நன்மை வந்து விடாது. சமுதாயத்தின் அடித்தளத்து மக்கள் அனைவரும் தாங்கள் என்ன செய்ய விரும்புகிறோம் என்பதைப் புரிந்து கொண்டு எழுச்சி பெற வேண்டும். அப்பொழுதுதான் நாம் எதையும் செய்ய வேண்டும். அதை ஆங்காங்கே உள்ள கோயில்களிலேதான் வைத்துச் சொல்ல வேண்டும். ஆங்காங்கே உள்ள கடவுளின் பெயரால்தான் சொல்ல வேண்டும். நம்முடைய புராண இதிகாசங்களின் பெயரால்தான் சொல்ல வேண்டும். அதற்கு நீங்கள் தயாராக வேண்டும் என்பதுதான். அதனுடைய வெற்றி விழாவாக, நிறைவு விழாவாக இன்று இந்த சிற்றுண்டி விருந்தை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். எனவே, நீங்கள் ஒவ்வொருவருமே போகின்ற இடத்திலே மக்களுக்கு நன்மை செய்கின்றது மட்டுமல்ல, அங்கே கூடி கருத்துக்களைச் சொல்ல வேண்டும். கருத்துப் புரட்சி வர வேண்டும். நம்முடைய கருத்தைச் சொல்லுங்கள். நம்முடைய கருத்துக்கு ஒத்த கருத்து உடையவர்களை உருவாக்குங்கள். நாம் அவர்களை உருவாக்கிக் கொண்டுதான் சமயத்தையோ, சமுதாயத்தையோ சந்திப்போம்.

அரசியலைப் பற்றி நமக்கு அக்கரை இல்லை. அரசியலே தேவை இல்லை. அரசாங்கம் என்று ஒன்று இல்லாமலேயே இந்த நாடு சமுதாய அமைப்பிலே வாழ முடியும். அந்த நம்பிக்கை உள்ளவர்கள் நாம். அப்படி இந்த நாட்டை கி.பி. 785இலிருந்து 1279 வரை 400 ஆண்டுகள் சித்தரிசம் ஆண்டிருக்கிறது. இந்த நாட்டை அதற்கு முன்னாலே சங்க காலத்திலே சித்தரிசம்தான் ஆண்டிருக்கிறது. எனவே, ஆண்ட ஒரு தத்துவத்தை - அது மாண்ட தத்துவமல்ல அது ஆண்ட தத்துவம் என்று சொல்லி அந்த தத்துவம் மீண்டும் ஆள வேண்டும். இந்து மதத்தால்தான் எதையும் செய்ய முடியும் என்று சொல்லுகிறோம். அதைச் சொல்லும் பொழுது முகமதிய மதம் இந்துமதத்திலிருந்து தோன்றியது என்று சொல்லுவோம். கிறித்துவ மதம் இந்து மதத்திலிருந்துதான் தோன்றியது. புத்த மதமோ, மகாவீரமோ, Zoraster, Confucius இந்துமதத்தின் தத்துவத்திலிருந்து தோன்றியவைதான். உலகெங்கும் உள்ள கோவில்கள் வழிபாட்டு நிலையங்கள்

அனைத்துமே இந்துக்களாகிய சித்தர்கள் உண்டாக்கியதுதான் - சித்தரிசம் என்றுதான் சொல்லுகிறோம். ஹிந்துமதம் என்று சொல்லவில்லை. இந்தியம் என்று சொல்லுகிறோம். அதனால்தான் இந்து மறுமலர்ச்சி இயக்கம் என்று சொல்லுகிறோம். இந்தியப் பண்பாடு என்று சொல்லும் பொழுது தொன்மையான பண்பாடு அல்லது The Lost Lemuria கடந்த காலத்திலே இருந்து மறைந்து போன, கடலில் மறைந்த குமரிக் கண்டத்திலிருந்து பிறந்ததொரு தத்துவம் என்று சொல்லுகிறோம்.

நம்முடைய தத்துவம் மனிதன் பிறப்பதற்கு முன்னால் பிறந்து இருக்கின்ற நேரத்திலே இனிமேல் கிடைக்கக் கூடிய மறுபிறப்பு அனைத்துக்கும் விடைகளைக் கொடுக்கக் கூடிய ஒரு மாபெரும் தத்துவம். எனவே, நீங்கள் ஒரு உரிமையோடு இந்தத் தத்துவத்தை விமரிசித்து நமக்கு என ஆட்களைச் சேர்க்க வேண்டும். அடிக்கடி ஆங்காங்கே நாம் தொகையிலே சிறிதாக இருந்தாலும் ஆங்காங்கே கூடிக் கூடி நாம் பேச வேண்டும். அந்த உறுதியை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லி இந்த உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி வணக்கம்.



# சித்தர் நெறிநிலை உலகியல் அறிமுகம்:

(Dr.) ப.கிருட்டிணமூர்த்தி M.A (Ph.D)
தமிழ்த்துறைப் பேராசிரியர்
உ.நா.அ. கல்லூரி
பொன்னேரி

தெய்வீக அறிமுகம்:
குருமகா சன்னிதானம் சித்தர் கருவூரார்
பன்னிரண்டாவது பதினெண்சித்தர்
பீடாதிபதி
அரசயோகி இராசிவட்ட நிறைவுடையார்
(டாக்டர்) ப.கிருட்டிணமூர்த்தி எம்.ஏ
(பி.எச்.டி)
15, சண்முகம் தெரு
வரதராசபுரம்,
அம்பத்தூர் சென்னை-53
Pin 600053

## 1 வழி:-

[அருள் வழி, சித்தாந்தச் செயல்வழி, வேதாந்த வழி, நாதாந்த வழி, போதாந்த வழி, மறையாந்த வழி, முறையாந்த வழி, நெறியாந்த வழி, ஐந்தீ வேட்டல் வழி, முத்தீ ஓம்பல் வழி, ஐந்திறக் கணிப்பு வழி, அறிவார்ந்த கலை வழி, .... எனும் அநேக வழிகள். இவை ஏகவழியாகக் குருவழி ஒன்றுயமைவது கருவிலே திரு உடையாராலன்றிப் பிறரால் உணர முடியாது எனவே அனைத்தும் குரு வழிக்காண்க = திருவின் வழி குரு வழி

சொல்லாமல் சொல்லிக் காட்டாமல் காட்டித் தராமல் தரும், தருவே, குருவே கருவாகி, இரவு பகலின்றி வளர்க்க வளரும் திரு-]

## 2 வழித்துணை:-

திருமந்திற ஓலைநாயகங்கள், திருமந்தர ஓலைநாயகங்கள், குருவாணை ஓலைநாயகங்கள், திருவாணை ஓலைநாயகங்கள், அருளாணை ஓலைநாயகங்கள், மருளாணை ஓலைநாயகங்கள், ஞானக்காட்சி வழங்கும் நாயகங்கள், யாகத்திறமுறைக்கும் நாயகங்கள், யக்ஞத் திறமுறைக்கும் நாயகங்கள், ஓகத் திறமுறைக்கும் நாயகங்கள், ஓமத்திறமுறைக்கும் நாயகங்கள், வேள்வித் திறமுறைக்கும் நாயகங்கள், ஞானத் திறமுறைக்கும் நாயகங்கள், தவத் திறமுறைக்கும் நாயகங்கள், பதின்மூன்று வகைப்பட்ட திருவருட் செல்வர்கள் முதலியோர்

## 3 வழிகாட்டி:-

நான்மறைகள், நான்முறைகள், நானெறிகள், நான்வேதங்கள், மந்திறங்கள், மந்தரங்கள், எந்திறங்கள், ஏந்தரங்கள், தந்திறங்கள், பூசாவிதிகள், கருவறைப்படிகள், குருமார் ஒழுக்கங்கள், குருவாக்குகள், குருவாசகங்கள், திருவாக்குகள், திருவாசகங்கள், சூத்திறங்கள், *சூத்தரங்கள், (சூக்தங்கள், சுத்தங்கள் = பாட வேறுபாடு உண்டு) ஞான நூல்கள், சாத்திறங்கள், சாத்தரங்கள், தோத்திறங்கள், தோத்தரங்கள், ஓச்சுகள், கண்ணிகள், மாலைகள், குருபாரம்பரிய வாசகங்கள், தேவாரங்கள், பாசுரங்கள், அருட்பாக்கள் ... என பலவகைப்படும் அருளுலக இலக்கியங்கள்

## 4 வழிநடைப் பயணப் பணிகள் :-

உலகில் தோன்றிய ‘இந்து மதம்’, ‘சித்தர் நெறி’, ‘சிவநெறி’, ‘சைவ நெறி’, ‘மானுட நெறி’, .... எனச் சிறப்பிக்கப்படும் ஒரு சமுதாயத் தத்துவம் (The Indhuism is not a religion. Its is a social philosophy.

It is for the welfare of Human beings. The Siddhars are the protectors of the Human welfare and rights) சித்தர்கள் மனித நல உரிமைக் காப்பாளர்கள். இவர்களது நெறி எல்லாப் பயிரினங்களேயும், உயிரினங்களேயும், தூய்மைப்படுத்தி வாய்மைப்படுத்தி, உய்வு படுத்திடும். மனிதனின் விலங்குணர்வுகளேப் பதப்படுத்தித் தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு .... முதலியவைகளே வடிவப்படுத்தி வளமும், வலிவும், பொலிவும் உடையதாக்கிடும் ஆற்றல் சித்தர் நெறிக்குண்டு

மனிதனேப் படிப்படியாக, உயர்த்திக் கடவுள் ஆக்கிடும், அரிய, கூரிய, நேரிய, சீரிய செயல் சித்தாந்தங்களே, உருவாக்கியவர்களே சித்தர்கள் வெறும் வறட்டுத் தத்துவமோ, வேதாந்தமோ, கற்பனுவாதமோ ..... அல்ல சித்தர் நெறி.

இந்நெறி மனிதப்பிறப்பு, இறப்பு இவை கடந்த நிலேகள், மானுட உயிர் பற்றிய உண்மைகள், அண்டப் பெருவெளிகளும், அவற்றின் இயக்கங்களும் புரியச் செய்யும் கருத்துகள், மானுட வாழ்வின் உண்மைத் தத்துவம், தான் + நான் என்பனவற்றுடைய செயல் விளக்கம், தன்னேயறியும் வழிகள் தலேவனேயறியும் வழிகள், அருவ நிலேகள், அருவுருவ நிலேகள், பத்தி நிலேகள், சத்தி நிலேகள், சித்தி நிலேகள், முத்தி நிலேகள், வழிபடு தரத்தார்கள், வழிபடு நிலேயினர், வழிபாட்டு நிலேயங்கள், உலகின் தோற்றம், உயிரினத்தோற்றம் ,...... முதலியவற்றை விளக்குகிறது

இந்நெறிதான் ஒரு கடவுள், எல்லாம் வல்ல பரம்பொருள், எங்கும் நிறைந்த இறைவன் --- முதலிய கருத்துக்களேத் திருத்தி, பொருத்தமான தத்துவ நெறிகளே வழங்குகிறது. 'இறைவர்கள்', 'கடவுள்கள்', 'ஆண்டவர்கள்', 'தெய்வங்கள்', 'பட்டவர்கள்', 'தேவியர்கள்', 'தேவதைகள்', 'தேவர்கள்', 'அமரர்கள்', 'வானவர்கள்', 'விண்ணவர்கள்', 'கிண்ணரர்கள்', 'கிம்புருடர்கள்', 'கணங்கள்', 'முனிவர்கள்', 'இருடிகள்' என்று பன்மைப் பொருளுடைய சொற்களேயுடைய தமிழ்மொழிதான் உண்மையான சமயத்தை (A True Religion) உலகுக்கு நிலேயாக வழங்குகின்றது. இது இந்து மதம் என்று அழைக்கப்பட்டாலும், ஆரம்பக் காலத்தில், 'சித்தர் நெறி' (Siddha Philosophy) 'சீவநெறி', 'சிவநெறி' ... என்று பெயரிடப் பட்டுள்ளது. அதாவது இது ஒரு, 'வாழ்க்கை (நெறி) தத்துவம்', (A Philosophy of Life) இது ஒரு 'இயற்கை நெறித்துவம்' (Philosopthy of Nature) இது ஒரு மானுடப் பண்பாட்டு நெறித் தத்துவம் (A Philosophy of Human Culture) என்று விளக்கப்பட்டு உள்ளது.

சித்தர் நெறியால்தான், உலகிலுள்ள மதவெறி, சாதிவெறி, இனவெறி பண்பாட்டு வெறி, பதவி வெறி, புகழ்வெறி, அதிகார வெறி, ஆதிக்க வெறி, பொருள் வெறி, அகம்பாவம், ஆணவம், தன்னலம்.... முதலிய அனேத்தையும் அகற்றிச் சமத்துவச் சகோதரத்துவ சமதர்ம சமுதாயத்தை உலக அளவில் நிலேநாட்ட முடியும். இதனுல்தான் மானுட இனம், ஒற்றுமையையும் அமைதியையும், நிறைவையும் பற்றுபாசம் மிக்க அன்புறு இன்ப உறவுகளேயும் பெற்றிட முடியும். அதற்குரிய 'ஞானக்கல்வி', 'மெய்ப்பொருட் கல்வி', 'அகவுணர்வுக் கல்வி', 'சாகாக் கல்வி', 'வேகாக் கல்வி, 'போகாக் கல்வி' .... முதலிய கல்விகளே வகுத்திருப்பவர்களே சித்தர்கள்

இவற்றுல் மானுட இனநல உரிமைக்காகப் போராடும் தத்துவமே இந்து மதம் எனப்படும் சித்தர் நெறி என்பதும், இந்த நெறியே எல்லா வெறிகளேயும் அகற்றும் பேராற்றலுடைய நன்னெறி என்பதும் விளங்கிடும். எனவே இதைப் பரப்பிடுவதற்காகக் காலந்தோறும் சித்தர்கள் தோன்றுகிறுர்கள். பல்வேறு வகைப் பட்ட சித்தர்கள் இருப்பினும், அனேவரையுமே பயிராக்கியவரே பதினெண்சித்தர்கள் என்பதே உண்மை. இந்த உண்மைகள் மறையாக, முறையாக, நெறியாக, வேதமாக, பரம்பரைச் சொத்துக்களாக்கப்பட்டே வருகின்றன. அவற்றைப் பொதுவுடைமையாக, உலகச் சொத்தாக, மாற்றும் பணியில் ஈடுபட்டிருப்பவரே இன்றைய பீடாதிபதி இப்பணி முழுக்க முழுக்க விஞ்ஞானச் சூழலில், (with a Scientific Atmosphere) பகுத்தறிவுப் போக்கில் (with a Rationalistic Appraoch), பொதுவுடைமை நோக்கில் (with a Communistic Attitude) முழுமைப் புரட்சி முறையில் (with Radicalistic and Revolutionary means) ... நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதற்கான வரலாற்றுப் பின்னணிகள் (Historical backgrounds) தத்துவ அடிப்படைகள் (Philosophical Fundamentals) இலக்கிய ஊன்றுகள் (Literary Sources), செயல் திட்டங்கள் (Plans and Schemes), கொள்கைகள் (Policies and Principles) குறிக்கோள்கள் (Mottoes) ... கடந்த ஒரு நூற்றுண்டுக் காலமாக உருவாக்கப்பட்டு வந்துள்ளன

## 5. இன்றைய பணிநிலே விளக்கம்

கடவுள் என்ற ஒரு 'கற்பனே 'முதலாளி", 'கற்பனேச் சர்வாதிகாரி', 'கற்பனேத் தலேவன்', "கற்பனே அறவாணிகள்',... இல்லாத

ஒரு மதமே இந்து மதம். இது ஒரு மதமல்ல, வாழ்க்கை ஒழுகலாறுகளை வரையறைப் படுத்தும் தத்துவமேயாகும்.

சித்தர்கள் மானுட உணர்வுகளையும், வலிமைகளையும், செயலாற்றல் களையும், சிந்தையார்வங்களையும், நெஞ்ச ஆசைகளையும், புனிதப்படுத்தி, இனிமைப் படுத்தியும், தத்துவங்களையும், சித்தாந்தத்தையும், வேதங்களையும், செயல்திட்டங்களையும்,...... தொகுத்து உருவாக்கியதுதான் 'சித்தர் நெறி' எனும் இந்து மதம். கண்கவர் கலையழகு கொலுவிருக்கும் சிற்பங்கள் நிறைந்த வழிபாட்டு நிலையங்களை எண்ணற்றுப் படைத்திட்ட சித்தர்கள், ஐம்பத்தாறு வகைப்பட்ட அருட் பட்டங்களை வழங்கு சமயத் கல்வித் திட்டத்தையும் (Educational systems), உருவாக்கினூர்கள். இதனால் வழிபாட்டு நிலையங்கள் கல்விக்கூடங்களாக (Educational institutes), சமுதாய நல மன்றங்களாக (Social Welfare Centres), மருத்துவமனைகளாக (Hospitals) கலையரங்குகளாக (Theatres), மூலிகைத் தோட்டங்களாகச் (Herbal Gardens) செயல்படலாயின. ஆனால், கால வெள்ளத்தால் பிறந்த கருத்து மாற்றங்கள், ஆட்சி மாற்றங்கள், அன்னிய கலப்புகள் ... முதலியவை வழிபாட்டு நிலையங்களின் முதன்மையையும் மேன்மையையும், தேவை யையும், பயனையும் .... மக்கள் மறக்க, துறக்க, மறுக்க, வெறுக்கச் செய்து விட்டன. எனவே, பண்பாட்டுச் சிதைவும், நாகரீகச் சீரழிவும், மனித சமுதாயத்தில் விளைவித்து விட்ட நச்சுக்களை அகற்றி அருட்பயிர் விளைவிக்கும் பணியே இப்போது துவக்கப்பட்டு இருக்கிறது அதற்கு -

1) "மனிதப்பிறவி புனிதமானது"
2) "மானுடராய்ப் பிறக்க கோடிதவம் செய்திடல் வேண்டும்"
3) "பாவத்தால் மனிதப்பிறவி தோன்றவில்லை"
4) "இறைமையைக் குறைவற நிறையப் புரிந்து கொள்ள மனிதப் பிறவியில் தான் நிறைய முடியும்"
5) "உலகெங்கும் இறைமையணுக்கள், இயங்கி மனிதர்களில், இறையாற்றல் ஊற்றெடுக்கப் பெறும் மனிதர்களைத் தோற்றுவித்து, மானுட இனத்தைத் தூய்மைப்படுத்தியும், வாய்மைப் படுத்தியும், உய்வு படுத்தியும், வருகின்றன. இவ்வணுக்களின் அகப்புற வடிவத் தோற்றமே இலிங்கம். ஒளியோடு இயங்கும் குறியாக இருக்கும் அணுவே இலிங்கம். இதனுள் இறைமையணுக்கள் தேங்க, இயங்க ஊற்றெடுக்க இயலும். எனவே கருவறையருள் வழங்கு திரு வேலைக்கு வடிவமாயிற்று இலிங்கம் ..."
6) மனிதனைப் "பிறந்ததற்கு வருந்தாமலும், இறக்கப் போவதற்கு அஞ்சாமலும் வாழத் தயாரிக்கும் தத்துவமே, சித்தர் நெறி (= சைவ சமயம் = இந்து மதம்)"
7) "கடவுளைக் காணலாம் என்று உறுதிமொழி தரும் நெறியே சித்தர் நெறி"
8) "கடவுளைக் காணும் வழிகளே சித்தர் நெறி"
9) "ஒவ்வொரு மனிதனையும் கடவுளாக்கும் நெறிமுறைகளே சித்தர்களின் சமயம் (= மதம்)"
10) "மனிதன் மண்ணாலும், பெண்ணாலும், பொன்னாலும் பெற முடியாத இன்பங்களையும், நிறைவுகளையும், நிம்மதிகளையும், அமைதிகளையும் ...... தருவதே சித்தர்களின் சித்தர் நெறியான சைவ சமயம் (= இந்து மதம்)"
11) "மனித வாழ்வின் உண்மையான தன்மைகளையும், பயன்களையும் விளக்கியுரைப்பது சித்தர்களின் சித்தர் நெறியான சைவ சமயம் (இந்து மதம்)"
12) "வறியவர், நோயுற்றோர், ஊனமுடையோர் பசியால் வாடிடாமல் காப்பதே சித்தர்களின் சமயம்"
13) "தன்னைப்போல் பிறரையும் எண்ணிப் பேணச் செய்வதே சித்தர்களின் சமயம்"
14) "இறைமையணுக்கள் இல்லாத உயிரினமே இல்லையென்பதால், பிற உயிரினங்களைக் காத்து, அன்பு செலுத்துதலே உண்மையான இறை வழிபாடு ஆகுமென்பதே சித்தர்களின் சமயம்"
15) "மனிதரை மனிதர் மதித்து, அன்பு செலுத்தி, உறவு பூண்டு ஒற்றுமையுடன் கூடி வாழும் பண்பினைத் தோற்றுவித்ததே சித்தர்களின் சமயம்"
16) "மனித வெறியுணர்வுகளை நெறிப்படுத்திப் பதம் கெடாமல் காத்து வரும், இதமான தத்துவமே சித்தர் நெறி"
17) "செல்வர்களுக்கு சிந்தையாறுதலையும், நெஞ்ச நிறைவையும், உணர்வமைதியையும் வழங்கும் வல்லாண்மை மிக்க தத்துவமே சித்தர் நெறி"
18) "தனிமைக்கு இனிமையும், பயனும் தரவல்ல பேராற்றலுடைய தத்துவமே சித்தர் நெறி"

19) “மனிதனை மனிதன் உறிஞ்சியும், சுரண்டியும், ஏமாற்றியும், கொன்று தின்றும் வாழும் வெறிகளை ஒழித்து மனிதனை மனிதன் மதித்தும், போற்றியும், பேணியும், அன்பு செலுத்தியும், அரவணைத்தும் ...... வாழும் புனித வாழ்வைப் படைக்க வல்ல தத்துவமே சித்தர் நெறி”

20) “பேராசையின்றி அவரவர் தேவைக்கேற்ற வசதிகளும், உழைப்புக்கேற்ற ஊதியமும், பெற்று வாழக்கூடிய சமரசச் சமுதாயத்தை சமைக்க வல்ல தத்துவமே சித்தர் நெறி”

21) “கடவுளைப் படைக்கவும், மனிதனைக் கடவுளாக மாற்றவும், கடவுளை மனிதனாக வரச் செய்யவும் .... தேவையான வழி வகைகளைக் கூறும் அநுபவச் சித்தாந்தமே சித்தர் நெறி”

22) “இறையாற்றலால் ஈரநெஞ்சமும், ஈகைச் சிந்தையும், ஈக உணர்வும், ஈட்ட மிகு செயலுடைய வாழ்வை சமைக்க அறிவுரை வழங்கும் அருளுரையே சித்தர் நெறி”

23) “மானுடரே அண்டங்களனைத்துக்கும் அரசரென்ற தத்துவத்தைச் செயலாக்கப் பூர்வமாக விளக்குவதே சித்தர் நெறி”

24) “மானுட உணர்வுத் தேக்கங்களுக்குப் போக்கிடமாய் இருப்பதே சித்தர் நெறி”

25) ... ... ... (மூல நகலிலேயே இந்த வாசகம் நிரப்பப்படவில்லை)

26) “சமத்துவச் சகோதரத்துவச் சமுதாயத்தை சமைக்கும் தத்துவமே சித்தர் நெறி”

27) “தனி மனிதன், உறவு முறைகளையும், உரிமைகளையும், உள்ளடக்கமான உணர்வுகளோடு காத்து வளர்த்துப் பயன்படுத்தி உய்வு பெற வழிகாட்டும் தத்துவமே சித்தர் நெறி”

28) “ஒவ்வொரு மனிதரும் பெண்டிர், அறவோர், அந்தணர், பத்தர், சித்தியார், நீத்தார், மூத்தோர், சிறுஅர், ஊனத்தார் ..... என எல்லாத் திறத்தாரையும், தரத்தாரையும் முறைமுறையாகப் பேணிக் காக்கும் பண்பினை வளர்க்கும் தத்துவமே சித்தர் நெறி”

29) “உறவுமுறைப் பெண்டிரையும், உழுவலன்புப் பெண்டிரையும், உரிமைப் பெண்டிரையும் கண்மணி போல் காக்கும் கடைமையைக் கற்பித்துப் போற்றிப் பேணி வளர்க்கும் தத்துவமே சித்தர் நெறி”

30) “திருவும் குருவும் கருவாயிருந்து மனிதத் தன்மையை ஈன்றெடுத்தமைக்குச் சான்றாகவும், ஊன்றாகவும், சாட்சியாகவும், காட்சியாகவும் .... இருக்கும் தத்துவமே சித்தர் நெறி”

31) “முற்பிறப்பையும், மறுபிறப்பையும் சாதனமாக்கித் தனிமனிதர்களைச் சிறந்தோராகச் செதுக்கும் சிற்ப சாத்திறமே சித்தர் நெறி”

32) “மண் பிசைவது முதல் பொன் செய்வது முடிய விளக்கிடும் ஞானமே சித்தர் நெறி”

33) “கருவழி உணர்வோரையும், குருவழி உணர்வோரையும், திருவழிப் படுத்துவதே சித்தர் நெறி”

34) “கருவறைத் திருவழியாகப் பெற முடியாததையும் குருவழியாகப் பெறுவதற்குறிய அநுபவச் சித்தாந்தமே சித்தர் நெறி”

35) “அண்டப் பெருவெளியில் பிண்டத்தை நிறைக்கவும், பிண்டத்துள் அண்டத்தை அடக்கவும் கற்பிக்கும் நெறியே சித்தர் நெறி”

36) “இறைமை அணுக்களால் நாள், கோள், இராசி, மீன், ஐம்பூதம் .... எனப்படுவனவற்றால் வரும் குறைகளை அகற்றிடும் முறைகளை வழங்குவதே சித்தர் நெறி”

37) “கோடுறைவானையும், காடுகிழாளையும், பாடு கிடந்து தேடிச் செல்வமாக்கிக் கொள்ள வழியமைப்பதே சித்தர் நெறி”

38) வழிபடு கடவுள்களையும், வழிபடு இடங்களையும், வழிபடு முறைகளையும் தனிமனிதர்களுக்கு அறிவித்து அகபுற வாழ்வில் மெய்ஞ்ஞான விழிகளைப் பெற்றிடச் செய்வதே சித்தர் நெறி”

39) “ஆணும் பெண்ணும் சமம் என்பதை மாதொருபாகன் எனும் காட்சித் தத்துவமாக வழங்குவது சித்தர் நெறி”

40) “ஐநூறு கோடிக் கால வரையறையோடு இவ்வையத்தையும், பயிரினங்களையும், உயிரினங்களையும் விளக்கியுரைத்துப் பயன்களை விளைவிப்பதே சித்தர் நெறி”

41) “சாத்திறங்கள், சாத்தரங்கள், தோத்திறங்கள், தோத்தரங்கள்,

நூல்கள், குருவாசகங்கள், குருவாக்குகள், படிகள், சூத்திறங்கள், சூத்தரங்கள் ... எனும் எண்ணற்ற வகை இலக்கியங்களை வழங்குவதே சித்தர் நெறி"

42) "சிந்தையால் அறிபவை, நெஞ்சால் அறிபவை என அறியும் பொருள் இரு வகைத்தாயிருப்பன போலவே இறைமைத் தன்மைகளை அறிவாலும், அருளார்ந்த அன்பாலும் அறிய இரு வகைப்பட்ட வாய்ப்புக்கள் உள்ளன என்பதை அநுபவமாக்கிடுவதுதான் சித்தர் நெறி"

43) "அடுக்களை, படுக்கையறை, அரசவை, படுகளம், கருவறை, திருவிழாப் பந்தல் ... முதலிய அனைத்தையும் உயிரோடு அமைத்து இயக்கிடும் சாத்திர உள்ளீடுகளே சித்தர் நெறி"

44) "திங்கள் தோறும் மலரும் மலரான மங்கைக்கு மாசு இல்லை, வழிபடப்படும் ஆத்தாளாக அவளைக் காத்தாலே போதும் பிறவிப் பயன் பெறலாம் என்பதே சித்தர் நெறி"

45) "சாதி மதங்கள் பாதியில் வந்தவையாதலால், இவை கடந்தே புனிதக் காதலும், இல்லறமும், அரசும் அமைதல் வேண்டும் என்பதே சித்தர் நெறி"

46) "இனம் மொழி நாடு எனும் முக்கோணக் கூடே மனிதப் பண்பு வாழும் வீடு என்பதே சித்தர் நெறி"

47) "தமிழே அமிழ்து, இதனைப் பேசுவதே இறைவனைப் பேணுதல், இதன் வழியே இறைவனை எய்துவோர் நாளும் இருப்பர் என்பதே சித்தர் நெறி"

48) "தமிழில் தான் ஆயகலைகள் அறுபத்து நான்கு, அருட்கலைகள் நாற்பத்தெட்டு, கடவுட் கலைகள் ஒன்பது, தெய்வீகக்கலைகள் ஒன்பது, பேய்க்கலைகள் ஒன்பது, நோய்க்கலைகள் ஒன்பது, தேய் கலைகள் ஒன்பது, நான் மறைகள், நான் முறைகள், நானெறிகள், நான் வேதங்கள் எனப் புகழ்மிக்க பேறுகள் [= செல்வங்கள்] பதினாறு, முத்தீ ஓம்பல், ஐந்தீ வேட்டல் எனப் பூசை வகைகள் எட்டு ... முதலிய இன்னோரன்ன பல செல்வங்கள் இருக்கின்றன என்று தெளிவாகக் கூறுவதே சித்தர் நெறி"

எனப்படும் இந்த நாற்பத்தெட்டுக் குருவாசகங்களை* [* "மண்ணுக்குரைத்த மண்டல வாசகங்கள்" என்று குருபாரம்பரியத்தில் சிறப்பிக்கப் படுபவை"] மட்டுமாவது முதலில் எல்லாத் தமிழர்களும், தெரிந்து, அறிந்து, ஆராய்ந்து, புரிந்து, தெளிந்து, உணர்ந்து, ஒப்புக்கொண்டு செயல்படும்படிச் செய்தல் வேண்டும்

"திருவாசகமும், குருவாசகமும் தமிழரின் கண்கள்" என்று சித்தர்களும், அவர் வழி வந்தவர்களும் பாராட்டி யுரைக்கும் அருள்வாசகங்களைத் தமிழர் தெரிந்து பொருள் தெளிந்திடல் வேண்டும்."

இவையே இன்றையப் பணிநிலை விளக்கம். இதன் விரிவினைக் குருவழிக் காண்க. குருவாணை பெற்றோரிடம் அநுபவத்தால் அறிக.

சித்தர் கருவூரார்
31/1/81



1.“தனது மதத்தைப் புரிந்தவனே, தான் அறுதையில்லை என்பதைத் தெரிந்தவன்”
2.“அருளுலகப் பொருளுலக வறட்சிகளையும், தாகங்களையும், பசிகளையும் போக்கும் அருளூற்றுக்களே கோயில்கள்”
3.“மனிதகுல அகஞான புறஞான மெய்ஞ்ஞான விஞ்ஞானங்களின் சுருக்க விளக்கத் தொகுப்பே தமிழரின் இந்துமதம்”
4.“அக இருள்களையும், புற இருள்களையும் அகற்றும் பெருஞ்சுடர்களே தமிழரின் வழிபாட்டு முறைகள்”
5.மானுடப் பிறவிக்கும் பயிரின உயிரின வாழ்வியல் இயக்கங்களுக்கும், மண்ணையும் விண்ணையும் இணைத்து இயக்குபவைகளுக்கும் விளக்கம் தருவதே பதினெண் சித்தர்களின் ‘சித்தர் நெறி’ எனும் ‘சீவநெறி’யான மெய்யான இந்துமதம்.”
6.ஆறுத் துயரங்களையும், தீராத் தொல்லைகளையும், மாறுக் கவலைகளையும் நலப் படுத்துவதுதான் தமிழரின் இந்துமதச் சாத்திரச் சம்பிறதாயச் சடங்குகள்”

**பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதியின் குருபாரம்பரிய வாசகம்**

[அவர் தமது இறுதிக் காலத்தில் சிந்தை நொந்து மனம் நைந்து எழுதியவை]



BOOK POST

**To**

**<u>If undelivered please return to:</u>**

Forum of Siddharadiyaans
C/o Mr. V.Muniraju
Door No.345, Bellandur Post
Outer Ring Road,
Bangalore East 560103
Cell: 09972130609